**வரையறுத்த கொழும்பு கொமேர்சல் பசளை கம்பனி – 2022/ 2023**

-----------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுத்த கொழும்பு கொமேர்சல் பசளை கம்பனியின்(“கம்பனி”) 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள், என்பவற்றை உள்ளடக்கிய 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகார கம்பனியினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து

வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

  கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

  முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது கம்பனியின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டு கம்பனியினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,

தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கம்பனியால் ஐயக் கடனுக்கான ஒதுக்கீடாக ரூபா 37,384,363 கடன்பட்டோர் மீதியிலிருந்து கழித்து காட்டப்பட்டிருந்தும் நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு குறிப்பு இலக்கம் 3.8 இல் காட்டப்பட்டுள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வு மேற்கொள்ளப்படாது பல ஆண்டுகளாக ஒரே அறிக்கை கணக்காய்விற்குச் சமரப்பிக்கப்படவில்லை. மேலும் கடன்பட்டோர் மீதிக்குரிய காலப்பகுப்பாய்வு பெறுமதி ஐயக் கடனுக்கான ஒதுக்கீடாக காட்டப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது. | இந்த தவறு சரிசெய்யப்பட்டுள்ளது. | ககடன்பட்டோர் காலப்பகுப்பாய்வினை மேற்கொண்டு ஐயக்கடனுக்காக ஒதுக்கீடு செய்தல் இனங்காணப்படுதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறான இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் பசளை இருப்பின் பெறுமதி ரூபா 29,771,585 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இறுதி இருப்பின் பெறுமதியாக இருப்புக் கணக்கின் பெறுமதியான ரூபா 30,472,835 காட்டப்பட்டிருந்தது. | அடுத்துவரும் கணக்காண்டின் போது இப்பிரச்சினையை சரிசெய்வதற்கு நடவபடிக்கை எடுக்கப்படும். | பௌதீக இருப்பு மெய்மையாய்வுப் பெறுமதியினை இறுதி இருப்பின் பெறுதியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | நிதி ஆண்டின் போது இந்திய கடன் வசதிகள் மற்றும் உதவியின்கீழ் கிடைத்திருந்த ரீ.எஸ்.பி யூரியா மற்றும் எம்.ஓ.பீ என்ற 111,077 மெற்றிக் தொன் பசளைகளை துறைமுகத்திலிருந்து ஹுனுபிடிய பிரதான களஞ்சியம் மற்றும் | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திறைசேரி மீளளிப்புக்களை சரியாக நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிராந்திய களஞ்சியங்களுக்கு எடுத்துச் செல்வது வரையான உற்பத்தி, போக்குவரத்து, ஏற்றுதல், இறக்குதல் கூலி மற்றும் நிருவாகச் செலவுகளாக மேற்கொள்ளப்பட்டது என காட்டப்படுகின்ற ரூபா1,346,652,978 மொத்த தொகை திறைசேரியிடமிருந்து மீளளிப்புச் செய்யக்கூடிய செலவாக கொள்வனவுக் கிரயத்தில் கழித்துக் காட்டப்பட்டிருந்தது. அவ்வாறு கழிக்கப்பட்ட பெறுமதி கம்பனியின் வழக்கமான செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் பசளை கொள்வனவுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள், கடன்கள் மற்றும் உதவிகளின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பசளைக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளின் மொத்த தொகையை மிகைத்திருந்ததுடன் அதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான கொள்வனவுக் கிரயம் ரூபா 505,074,049 செலவுப் பெறுமதியாக மாறியிருந்தது. இது வழமைக்கு மாற்றமான விடயமாக அவதானிக்கப்பட்டதுடன் கொள்வனவுக் கிரயம் செலவுப் பெறுமதியாக மாறிய முறைமை தொடர்பாக ஏற்றுக்கொள்ளக்கூடிய விளக்கமளித்தலினை வழங்குவதற்கு கம்பனிக்கு முடியாதிருந்தது. | | |
| (இ) | மீளாய்வாண்டிற்கான விற்பனைக் கிரயத்தினை கணக்கீடு செய்யும் போது விற்பனைக் கிரயமாக கருத்திக்கொள்ள முடியாத பிராந்திய பசளைக் களஞ்சியம் மற்றும் கமநல சேவை நிலையங்களுக்கு பசளைகளை பகிர்ந்தளிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட போக்குவரத்து கட்டண செலவாகிய ரூபா 453,863,594 தொகை, பசளைகளை விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் நடைமுறைக்குரிய தலைமை அலுவலகத்தின் ஏற்றுதல் கட்டணம் ரூபா 9,646,304, பிராந்திய களஞ்சியத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுதல் மற்றும் இறக்குதல் கட்டணம் ரூபா 339,744, பிராந்திய களஞ்சியத்தின் சில்லறைக் காசுச் செலவுகள் ரூபா 29,850, ஊழியர் சம்பளம், ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய பங்களிப்பு, மேலதிக நேர வேலைப்படி, 1/20 படி, ஊக்குவிப்புப் படி, மிகையூதியம் கூட்டிணைந்த படி என்பனவாக செலுத்திய ரூபா 7,122,689 மொத்த தொகை உள்ளடக்கியிருந்ததன் காரணமாக செயற்பாட்டு இலாபம் ரூபா 471,002,181 ஆல் குறைவடைந்திருந்தது. | இச்செலவுகள் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் கிரயத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட ஒரு செலவாகக் காணப்பட்டிருந்தும் உண்மையிலேயே இச்செலவு கம்பனியின் விற்பனை அல்லது பகிர்ந்தளித்தல் நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்டதல்ல. இச்செலவுகள் முன்னைய ஆண்டின் கடன் மற்றும் உதவியின் மூலம் கொண்டுவரப்பட்ட பசளைகளை ஏற்றுதல் மற்றும் இறக்குதல் கட்டணமாக மேற்கொள்ளப்பட்ட செலவாகும். அச்செலவானது திறைசேரியின் மூலம் எங்கள் கம்பனிக்கு மீளளிப்புச் செய்யப்படுதல் வேண்டும். எனவே இச்செலவானது விற்பனைகள் மற்றும் பகிர்ந்தாளித்தல்கள் கிரயத்திற்கு உட்பட்டதல்லாத செலவு என்பது எங்களின் கருத்தாகும். | நிதிக்கூற்றுக்களின் மூலம் சரியான தகவல்களை வெளிப்படுத்தும் வகையில் செலவுகள் வகைப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பொருட்களைப் பெற்றுக்கொள்ளல் பத்திரம் 39 இற்குரிய ரூபா 19,371,441 பெறுமதியான கொடுக்கல் வாங்கல்கள் 2000 ஆம் இலக்க இருப்புக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டதன் பின்னர் J/MAY/0028 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்கொடுத்தோர்கள் கணக்குகளுக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. எனினும் அப்பொருட்களை நீக்குவதற்கான காரணம் நாட்குறிப்புக்களுடன் சமர்ப்பிக்கப்படவில்லை. | பிழைகளை சரிசெய்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட நாட்குறிப்பாகும். அப்பெறுமதி சம்பந்தமான விபரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நாட்குறிப்புக்களை இடும் போது நாட்குறிப்பு வவுச்சர்களுடன் துணை ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (உ) | 2021 ஒக்தோபர் 18 ஆந் திகதி 100,224 போத்தல் நெனோ நைட்ரஜன் திரவப் பசளைகளை இறக்குமதி செய்வதற்கு வழங்குனருக்கு ஒரு போத்தலுக்கு அமெரிக்க டொலர் 12.45 வீதம் ரூபா 253,301,126 செலுத்தப்பட்டிருந்தும் பின்னர் ஒரு போத்தலுக்கு அமெரிக்க டொலர் 10 வரை குறைக்கப்பட்டு மிகையாகச் செலுத்திய ரூபா 49,846,406 பணத்தை எதிரீடு செய்வதற்கு வழங்குனர் இணங்கியிருந்தும் கணக்காய்வுத் திகதி வரை அப்பணத்தை எதிரீடு செய்வதற்கு கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அது இறுதிக் கணக்கிலும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய பணத்தை அமைச்சரவை பத்திரத்தினூடாக பின்னர் மேற்கொள்ளப்பட்ட விலைத்திருத்தம் காரணமாகக் கொள்ளப்பட்டிருந்ததுடன் இதற்கான நிதி ஏற்பாடு பொதுத்திறைசேரியினால் வழங்கப்பட்டதனால் மிகையாகச் செலுத்தப்பட்ட பணத்தை மீண்டும் அறவீடு செய்வது சம்பந்தமாக பொதுத்திறைசேரிக்கு தெரியப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த இருப்பினை இலவசமாக பகிர்ந்தளிப்பதற்கான நிதி ஏற்பாடு பொதுத்திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ளதனால் இருப்பினை மதிப்பீடு செய்வது மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் வழங்குனரிடமிருந்து அறவிட வேண்டிய பணமாக காட்டும் இயலுமையும் இருக்கவில்லை. | வழங்குனருக்கு மிகையாகச் செலுத்தப்பட்டுள்ள பணத்தை அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2023 செப்தெம்பர் 30 ஆந் திகதி விவசாயிகளுக்கு பகிர்ந்தளித்தல் மேற்கொள்ளப்படாத ரூபா 3,672,270 பெறுமதியான 500 மில்லி மீற்றர் 1,809 போத்தல் நெனோ நைட்ரஜன் திரவப் பசளை இந்த கம்பனியின் களஞ்சியத்திலும் ரூபா 1,423,030 பெறுமதியான 701 போத்தல் பசளை வரையறுத்த லங்கா பசளை கம்பனியின் களஞ்சியத்திலும் காணப்பட்டதனால் அந்த அனைத்து பசளைகளும் 2023 செப்தெம்பர் மாதம் அளவில் காலாவதியாவதற்கு நிர்ணயிக்கப்பட்டது எனவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. திரவப் பசளை இறக்குமதியின் போது சேதமடைந்த ஒழுக்கு ஏற்பட்டிருந்த போத்தல்களின் எண்ணிக்கை 11 அக இருந்ததுடன் இறக்குமதியின் போது | உரிய நைட்ரஜன் திரவப் பசளைகளை பகிர்ந்தளிப்பதற்காக எங்கள் கம்பனிக்கு எழுத்துமூல அனுமதி அல்லது பகிர்ந்தளித்தல் திட்டம் விவசாய அமைச்சிடமிருந்து இன்றுவரை கிடைக்கவில்லை. அந்த திட்டம்பெற்றுக்கொள்ளப்பட்ட உடன் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | காலாவதியாவதற்கு முன்னர் பசளை இருப்புக்களை பகிர்ந்தளித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உருவாகியிருந்த பற்றாக்குறை 07 போத்தல்களாகும். அதன் பெறுமதி ரூபா 36,540 ஆகும். | | |
| (எ) | கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையின் மூலம் தயாரிக்கப்பட்ட பேரேட்டுக் கணக்குகளின் ஆரம்ப மீதி சுயமாக உருவாகியிருக்காததன் காரணமாக அந்த முறைமையின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட பரீட்சை மீதிக்கும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட மீதிக்குமிடையே வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | இப்பிரச்சினை தற்பொழுது சரி செய்யப்பட்டுள்ளது. | நிறுவன ரீதியான வளங்களை திட்டமிடும் மென்பொருள் முறைமையினை (ERP) முழுமையாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | 2022 பெப்பரவரி 01 ஆந் திகதிய அமைப/22/0077/323/003 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் வரையறுத்த இலங்கை பசளை கம்பனியினையும் வரையறுத்த கொழும்பு கொமர்சல் பசளை கம்பனியினையும் ஒருங்கிணைத்து ஒரு தனிக்கம்பனியாக பேணுவதற்கு தேவையான கலந்துரையாடல் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதற்கிணங்க கொழும்பு கொமர்சல் பசளை கம்பனியின் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல் நிச்சயமற்றது என அவதானிக்கப்பட்டதுடன் கம்பனிகளை ஒருங்கிணைக்கும் தீர்மானம் சம்பந்தமாக கணக்கீட்டு குறிப்புக்களின் மூலமேனும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது சம்பந்தமாக தேவையான மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்க விரும்புகின்றேன். | கம்பனிகளை ஒருங்கிணைக்கும் தீர்மானம் கணக்கீட்டு குறிப்புக்களின் மூலம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஐ) | 2023 மார்ச் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 15,904,111 பெறுமதியான பொதி செய்யும் உறைகள் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பொதி செய்தல் பொருள் இருப்பினை பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இப்பிரச்சினை எதிர்காலத்தில் ஏற்படமாட்டாது. | இருப்பு மெய்மையாய்வு செய்யப்பட்டு அறிக்கையில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |
| (ஒ) | கம்பனியின் பெறுவனவுகளை கணக்கு வைப்பதிலுள்ள பலவீனங்களின் காரணமாக வங்கி கணக்கிற்கு நேரடி வைப்பாகக் கிடைத்த ரூபா 942,719 தொகையினையும் உள்ளடக்கி மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் கிடைத்த ரூபா 5,029,353 தொகையை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க இனங்காணப்படாத பெறுவனவுகளை இனங்கண்டு உரிய கணக்குகளில் செலவு வைக்கப்படாமையின் காரணமாக வணிக கடன்பட்டோர் மீதி மிகைக் கணிப்பீடு | வங்கி கணக்கிற்கு கிடைத்த நேரடி வைப்புக்களை இனங்காண்பதற்காக கம்பனியால் எடுக்கக்கூடிய அனைத்து நடவடிககைகளும் எடுக்கப்பட்டிருந்தும் அந்த அறிவுறுத்தல்களுக்கு முரணாக மூன்றாந் தரப்பினர் நடவடிக்கை எடுத்ததன் காரணமாக இப்பிரச்சினை உருவாகியுள்ளது. இனங்காணக்கூடிய அனைத்து மீதிகளையும் உரிய கொடுக்கல் வாங்கல்களின் கணக்கிற்கு | நேரடி வைப்பு பெறுவனவுகளை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தது. | செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஓ) | மீளாய்வாண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட வணிக கடன்பட்டோர் மீதியான ரூபா 1,053,306,348 தொகைக்காக தனித்தனி கடன்பட்டோர் பட்டோலை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் உரிய கடன்பட்டோர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தும் அதற்காக பதில் கிடைக்கவில்லை. | தேவையான சான்றுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஓ) | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பாவனையாளர் வைப்புக்கள் மற்றும் மிகைப் பெறுவனவு மீதியான ரூபா 178,913,393 சம்பந்தமான மீதிகளை உறுதமிப்படுத்தும் கடிதம் மற்றும் ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த மீதியினுள் கமநல சேவை அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து கிடைத்த ரூபா 169,958,034 பணம் உரிய கமநல சேவை நிலையத்தை இனங்கண்டு கிடைக்க வேண்டிய கடன் மீதியிலிருந்து கழிப்பதற்குப் பதிலாக பாவனையாளர் வைப்பு மற்றும் மிகைப் பெறுவனவு கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக இறுதித் திகதியில் காணப்பட்ட கடன்பட்டோர் மீதி பிழையானது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | கமநல அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து உரிய தகவல்களைப் பெற்றுக்கொள்வது தாமதமடைந்துள்ளது. தகவல்கள் கிடைத்ததன் பின்னர் உரிய பிரச்சினையை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான கடன்பட்டோர் மீதியினை இனங்காணதல் வேண்டும். |
| (ஔ) | 2016 ஆம் ஆண்டில் நிவாரணப் பசளை வழங்குதல் நிறுத்தப்பட்டு விவசாயிகளுக்கு பணம் வழங்கும் நடைமுறைக்கு நிவாரண கொள்கையை மாற்றியதன் காரணமாக 2016 பெப்ரவரி 29 ஆந் திகதியில் கம்பனியிடம் இருந்த 55,809 மெட்றிக் தொன் பசளைகளுக்குரிய நிவாரணப் பெறுமதியான ரூபா 2,112,468,040 திறைசேரிக்கு அனுப்பிவைக்காது செலுத்த வேண்டிய பெறுமதியாக கணக்கீடு செய்யப்பட்டதுடன் கம்பனியின் குறுங்கால கடனுக்கான வட்டிச் செலவுகளும் முத்திரை மற்றும் எழுதுகருவி கட்டணங்களுமாக ரூபா 1,009,667,181 தொகை அப்பணத்திலிருந்து செலவு செய்யப்பட்டது. உரிய பெறுமதியை திறைசேரிக்கு அனுப்பிவைக்குமாறு முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையின் மூலம் சிபாரிசு செய்யப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரை திறைசேரிக்கு செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 1,102,800,859 ஆக நிதிக்கூற்றக்களில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | இப்பிரச்சினை மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பணம் நிவாரணப் பணம் அல்லாததுடன் 2016 திறந்த சந்தை நிலைமையினுள் நிவாரணப் பசளையாக ரூபா 350 இற்கு விற்பனை செய்வதற்கு இருந்த பசளையை ரூபா 2500 இற்கு விற்பதன் மூலம் உழைக்கப்பட்ட மேலதிக வருமானமாகும். நிகழ்கால திறந்த சந்தை நிலைமையில் நிறுவனத்தின் நடவடிக்கைகளை பேணுவதற்காக மேற்கூறிய பணத்தை தொழில்பாட்டு மூலதனாக ஈடுபடுத்துதல் அத்தியவசியமானதுடன் அப்பணத்தை நிலையான வைப்புக்களாக பேணி நாணயக் கடிதத்தினை திறக்கும் போது பிணையாக வங்கிக்கு வழங்க வேண்டி ஏற்பட்டது. இப்பணத்தை நிறுவனத்திலேயே வைத்திருப்பதற்காக பொதுத்திறைசேரியுடன் நடாத்தப்பட்ட | திறைசேரிக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய பணம் அனுப்புதலினை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கலந்துரையாடலின் போது இணக்கப்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த இணக்கப்பாட்டினை எழுத்துமூலம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | |
| (க) | மீயவாண்டின் போது இந்திய கடன் முறைமையின் கீழ் கிடைத்த 28,100 மெட்றிக் தொன் பசளை இருப்பினை கமநல சேவை நிலையங்களின் மூலம் விற்பனை செய்ததனால் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 2,416,052,756 பணத்தில் ரூபா 1,582,713,863 மாத்திரம் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டு ரூபா 833,338,893 பணம் ஆண்டின் இறுதித் திகதி வரை கம்பனியின் வங்கி கணக்கில் விளைவற்றதாக வைக்கப்பட்டிருந்தது. | இந்திய கடன் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட பசளைகளில் நெல்லுக்காக வழங்கப்பட்ட பசளைகளுக்கான பணத்தை சேகரித்தலினை கமநல சேவை நிலையம் மேற்கொள்வதுடன் பொதுத்திறைசேரிக்கு அந்த பணம் அனுப்புதலும் அத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. நெல் மற்றும் சோளத்திற்காக வழங்கப்படுகின்ற பசளைக்கான பணத்தை சேகரித்தல் மற்றும் பொதுத்திறைசேரிக்கு அனுப்பிவைத்தல் கம்பனியினூடாக மேற்கொள்ளப்படும். இன்றுவரை அவ்வாறு சேகரிக்கப்பட்ட பணத்தில் பொதுத்திறைசேரியின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் அப்பணத்திலிருந்து செயற்பாட்டுச் செலவுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட பணத்தை தவிர்த்து ஏனைய அனைத்து பணமும் பொதுத்திறைசேரிக்கு அனுப்பி முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் நிறுவனத்திற்கு இருப்பினை இறக்குமதி செய்து பகிர்ந்தளிக்கும் வரையான செயற்பாட்டுச் செலவுகள் பொதுத்திறைசேரிக்கு வழங்கப்பட்டதன் பின்னர் மிகுதியான வருமானத்தையும் பொதுத்திறைசேரிக்கு அனுப்பிவைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | பொதுத்திறைசேரிக்கு அனுப்பிவைக்க வேண்டிய பெறுமதியை உறுதிப்படுத்தி தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கா) | கம்பனிக்கு சட்டரீதியாக ஒப்படைக்கப்படாத கம்பனியின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள வத்தளை ஹுனுபிடிய காணி ரூபா 90,000,000 இற்கு பெறுமதியிடப்பட்டு நடைமுறையற்ற சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக நடைமுறையற்ற சொத்துக்கள் அத்தொகை | நீண்டகாலமாக எங்கள் கம்பனி அக்காணியை பயன்படுத்தியிருந்ததுடன் காணியின் உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான தேவையான சட்ட நடவடிக்கையும் இன்றுவரை | சட்டரீதியாக உரிமையுள்ள சொத்தக்கள் மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | இடம்பெற்று வருகின்றது என தெரிவிக்க விரும்புகிறேன். | |
| (கி) | மொத்த கிரயம் ரூபா 4,979,818 ஆன மென்பொருள் முறைமையின் கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 3,894,518 பெறுமதி மாத்திரம் 2022 செப்தெம்பர் 01 ஆந் திகதி முடிவுறாத வேலைகள், மூலதனக் கணக்கிலிருந்து நீக்கப்பட்டு ஆதனம், பொறி, உபகரணத்தின் கீழ் கணனி மென்பொருள் இயந்திர கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,085,300 பெறுமதியானது அக்கணக்கிற்கு வரவு வைக்கப்படாமையின் காரணமாக நடைமுறையற்ற சொத்துக்கள் அத்தொகையால் குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்கிக்கொள்ளப்படுகின்றது. எதிர்காலத்தில் தேவையான சரிசெய்தல்கள் செய்யப்படும். | ஆண்டிற்கான வருமானம் இனங்காணப்படுதல் வேண்டும். |
| (கீ) | மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டிற்காக நிலுவையாக இருந்த தொலைபேசிக் கட்டணத்திற்காகச் செலுத்திய ரூபா 172,030 தொகை தொலைபேசிக் கட்டணக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டிற்கான இலாபம் அத்தொகையால் குறைவடைந்திருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்கிக்கொள்ளப்படுகின்றது. எதிர்காலத்தில் தேவையான சரிசெய்தல்கள் செய்யப்படும். | ஆண்டிற்கான வருமானம் இனங்காணப்படுதல் வேண்டும். |
| (கு) | மீளாய்வாண்டிற்கான வருமான கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள வருடாந்த பெறுமானத் தேய்வுப் பெறுமதியான ரூபா 40,324,267 இற்குப் பதிலாக பிழையாக காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 40,058,378 ஆக உள்ளடக்கப்பட்டிருந்ததன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழான காசுப் பாய்ச்சலில் காசு உட்பாய்ச்சலாக ரூபா 265,889 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| | (i) காசுப்பாய்ச்சல் கூற்றில் வரிக்கு முன்னைய இலாபத்திற்கு நடைமுறையற்ற சொத்தக்களை நீக்கும் இலாபம் செம்மையாக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் ரூபா 194,329 ஆன சொத்தக்களை நீக்கும் பெறுமதி செம்மையாக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க செயற்பாட்டு காசுப் பாய்ச்சலானது அத்தொகையால் கூடுதல் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது இடம்பெற்றுள்ள தவறுகளை எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு இணங்கிக் கொள்கிறேன். | காசு உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சலினை முறைப்படியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | ஆதனங்கள், பொறிகள் உபகரணங்களை விற்பனை செய்வதற்குரிய காசு உட்பர்ச்சலின் பெறுமதியான ரூபா 287,340 தொகையினை காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக நீக்கப்பட்ட ஆதனம், பொறி, உபகரணங்களின் கிரயமான ரூபா 358,900 பெறுமதியானது காட்டப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 71,560 தொகையால் முதலீட்டு செயற்பாடுகளின் கீழான காசுப்பாய்ச்சல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது இடம்பெற்றுள்ள தவறுகளை எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு இணங்குகின்றென | காசு உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சலினை முறைப்படியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (iii) | சொத்துக்கள் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட வேண்டிய கணனி மற்றும் அச்சு இயந்திரங்கள் கிரயமான ரூபா 1,085,300 தொகை நடைமுறை வேலைக் கணக்கில் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக அதற்குரிய வருடாந்த பெறுமானத் தேய்வு ரூபா 158,273 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஆண்டிற்கான இலாபம் மற்றும் நடைமுறையற்ற சொத்துக்கள் அப்பெறுமதியால் கூடுதல் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழான காசுப் பாய்ச்சலில் காசு உட்பாய்ச்சல் அப்பெறுமதியால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | காசுப் பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது இடம்பெற்ற தவறுகளை எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு இணங்கிக் கொள்கிறேன். | வருடாந்த பெறுமானத் தேய்வு முறைப்படியாக இனங்காணப்படுதல் வேண்டும். |
| (கூ) | கடந்த 04 ஆண்டுகளில் கம்பனியின் விற்பனைகளுக்கு நேரொத்ததாக விற்பனைக் கிரயம் 73 சதவீதத்திற்கும் 89 சதவீதத்திற்கும் இடைப்பட்ட சதவீதத்தில் காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் போது அந்த சதவீதம் 14 சதவீத பெறுமதியினைக் கொண்டிருந்தது. | இது நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பித்தல் தவறாகும். கம்பனியால் மேற்கொள்ளப்பட்டு கம்பனிக்கு பொதுத்திறைசேரியினால் மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய நிருவாக மற்றும் போக்குவரத்துச் செலவுகளை விற்பனைக் கிரயத்திலிருந்து பதிவழித்ததன் காரணமாக இவ்வாறு விற்பனைக் கிரயத்தின் பெறுமதி குறைவடைந்துள்ளது. எவ்வாறாயினும் அடுத்துவரும் ஆண்டிலிருந்து மேலே குறிப்பிட்ட பொதுத்திறைசேரியிடமிருந்து கிடைக்க வேண்டிய செலவுகளை கம்பனியின் வருமானமாக நிதிக்கூற்றுக்களில் | நிதிக்கூற்றுக்களில் சரியான தகவல்களை சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | | உள்ளடக்குவதற்கு நாங்கள் உத்தேசித்துள்ளதுடன் அதற்கிணங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

**1.5.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கணனி முறைமைக்கு நாட்குறிப்புக்களை உள்ளடக்கும் போது அதற்காக முறையான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளும் உள்ளகக் கட்டப்பாட்டு முறைமையை பின்பற்றியிருக்கவில்லை. நாட்குறிப்புக்களுக்குரிய துணை ஆதனங்கள் நாட்குறிப்புக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையின் காரணமாக உரிய நாட்குறிப்புக்கள் பூரணமற்றது என மேலும் அவதானிக்கப்பட்டது. | சில சந்தர்ப்பங்களில் இப்பிரச்சினை உருவாகியுள்ளது என தோன்றியுள்ளதனால் எதிர்காலத்தில் இந்த முறைமையில் பிரச்சினைகள் ஏற்படாமல் இருப்பதற்கு தேவையான உள்ளகக் கட்டப்பாட்டு முறைமைகளைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்க விரும்புகிறேன். | நாட்குறிப்புக்களுக்காக முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |
| ஆ) | அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் PED/P/04/24(1) ஆம் இலக்க 2021 ஏப்ரல் 06 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் கம்பனியால் வருடாந்தம் பெற்றுக்கொள்ளப்படுகின்ற கப்பல் சரக்குகளை இறக்குதலினை துரிதப்படுத்தும் வருமானத்தில் 50 சதவீதம் அளவானவை மாத்திரம் ஊழியர்களின் செயலாற்றலின் அடிப்படையில் 03 மாதங்களுக்கான அடிப்படைச் சம்பளத்திற்கு சமமான தொகைக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் ஊழியர்களின் அடிப்படை சம்பளம் மற்றும் வாழ்க்கைச் செலவுப் படி ஆகிய இரண்டின் மொத்தத்தினை அடிப்படையாக் கொண்டு செலுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க செலுத்தப்பட்ட பணம் ரூபா 16,269,635 ஆக இருந்ததுடன் தொடக்க சம்பளத்தை கணிப்பீடு செய்த போது செலுத்த வேண்டிய பணம் ரூபா 13,949,760 ஆகும். அதற்கிணங்க ரூபா 2,319,875 பணம் மேற்கூறிய கடிதத்தின் நிபந்தனைகளை மீறி செலுத்தப்பட்டிருந்தது. | அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் PED/S/CCF1/03/05(i) ஆம் இலக்க கடிதத்தில் அடிப்படைச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு ஊக்குவிப்பு படிகளைச் செலுத்துதல் இடம்பெற வேண்டும் என்பது குறிப்பிடப்படவில்லை என வலியுறுத்துவதுடன் அதில் குறிப்பிடப்படுவது சம்பளம் என்பதாகும். அதற்கிணங்க பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் மொத்த சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு ஊக்குவிப்பு படி செலுத்தப்பட்டுள்ளது. எனவே கடிதத்தின் நிபந்தனைகள் எதுவும் மீறப்பட்டிருக்கவில்லை என தெரிவிக்க விரும்புகிறேன். கடிதத்தின் ஒரு பிரதி காட்டப்பட்டுள்ளது. | அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின; PED/P/04/24(1) ஆம் இலக்க 2021 ஏப்ரல் 06 ஆந் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மிகையாக செலுத்திய பணம் அறவிடப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2022 திசெம்பர் 21 ஆந் திகதிய PED 08/2022 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஊக்குவிப்பு படிகளைச் செலுத்தும் போது முன்னைய ஆண்டு தொடர்பாக பொதுத்திறைசேரிக்கு செலுத்த வேண்டிய பங்கிலாபம் செலுத்தப்படாதிருந்த போதிலும் கம்பனியால் 2019/2020. 2020/2021. 2021/2022 ஆகிய வருடங்கள் தொடர்பாக செலுத்த வேண்டிய பங்கிலாபம் செலுத்தப்படாது 2022 திசெம்பர் 07 ஆந் திகதி ஊக்குவிப்பு படி செலுத்தப்பட்டிருந்தது. | 2021, 2022 ஆம் ஆண்டுகளுக்கான பங்கிலாபத்தினை செலுத்துதல் தாமதமடைந்திருந்ததானது வருடாந்த பொதுச் சபைக் கூட்டத்தினைக் கூட்டுவதற்கு தாமதமடைந்தமை காரணமாக இருந்ததுடன் தற்பொழுது மேற்கூறிய ஆண்டிற்காக வருடாந்த பொதுச் சபை கூட்டம் அனைத்தையும் நடாத்தி பங்கிலாபமும் பொதுதிறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் PED 08/2022 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் திறைசேரிக்கு செலுத்த வேண்டிய பங்கிலாபத்தினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கொழும்பு கொமேர்சல் பசளைக் கம்பனி தனியார்மயப்படுத்தப்பட்ட 1994 யூலை 29 ஆந் திகதியிலிருந்து மீண்டும் கம்பனியை அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்ட திகதியான 1997 சனவரி 20 என்ற காலப்பகுதியின் போது 15 பல்வேறு தனியார் நிறுவனங்களுக்கு கடன் அடிப்படையில் பசளைகளை வழங்கியதற்காக கணக்காய்வுத் திகதியான 2023 செப்தெம்பர் 22 ஆந் திகதி வரையும் இன்னும் அறவிட வேண்டிய பணம் ரூபா 22,053,338 ஆகும். இக்கடன் மீதியை உறுதிப்படுத்துவதற்காக உரிய ஆவணங்கள் கம்பனியிடம் காணப்படாதிருந்ததுடன் அதன் காரணமாக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு கம்பனி தவறியிருந்தது. | இப்பிரச்சினை தொடர்பாக நாங்கள் கவனம் செலுத்தியுள்ளதுடன் இம்மீதி தொடர்பான புலனாய்வானது தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தற்பொழுது அமைச்சரவை மட்டத்தில் ஒரு குழு நியமிக்கப்பட்டதுடன் இக்குழுவின் சிபாரிசின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கிறேன். | கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| (i) நி.பி 137(5) | வழங்கல் சம்பந்தமான சந்தர்ப்பத்தின் போது அவற்றினைப் பரீட்சித்து சரியாக பெறுப்பேற்கப்பட்டுள்ளது என இல்லாதுவிடின் அரசாங்கத்தின் பிரமணங்கள் மற்றும் அறிவுறுத்தலகளுக்கு இணங்க ஒழுங்கற்ற வகையில் அப்பொருட்கள் தொடர்பான எண்ணிக்கைகள் காட்டப்பட்டிருந்தது என குறிப்பிடப்பட்டிருந்தும் கம்பனியால் பீ.வீ.சீ வயர்கள், ஒக்சிஜன், டயர்கள் டீசலை மாற்றும் குழாய்கள் முதலிய பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு முன்னர் முற்பணங்களாக இன்வொயிஸ் பெறுமதியான ரூபா 517,641 பணம் 05 தனியார் வழங்குனர்களுக்கு முழுமையாகச் செலுத்தப்பட்டது. | காசு அடிப்படையில் பொருட்களைப் பெற்றுக்கொள்ள வேண்டி ஏற்டபடுகின்ற பராமரிப்பிற்காக மற்றும் தேவையான ஏனைய சிறுஅளவில் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் காசோலைகளை வழங்கும் அடிப்படையில் முற்பணமாக இவ்வாறு கொடுப்பனவு செய்யப்பட்டதுடன் நிறுவனத்தின் வியாபாரத் தன்மைக்கு இணங்க அவ்வாறு கொடுப்பனவு செய்ய வேண்டிய சந்தர்ப்பம் உருவாகின்ற போதிலும் அது தொடர்பாக முறையான முகாமைத்துவத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் முழுப் பெறுமதியையும் முற்பணமாகச் செலுத்தாதிருத்தல் வேண்டும். |
| (ii) நி.பி 201(i) மற்றும் 371(2) | (i) நிர்ணயிக்கப்பட்ட செயற்பாடு முடிவடைந்த உடன் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் தீர்த்துவைக்கப்பட | இம்முற்பணங்கள் அனைத்தும் தீர்த்துவைக்கப்பட்டுள் ளது என தெரிவிக்க விரும்புகிறேன். | நிர்ணயிக்கப்பட்ட செயற்பாடு முடிவடைந்த உடன் பெற்றுக்கொள்ளப்பட் ட முற்பணங்கள் தீர்த்து |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | வேண்டிய போதிலும் 13 உத்தியோகத்தர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த மொத்தமாக ரூபா 1,460,999 உபகட்டு நிதியானது நிர்ணயிக்கப்பட்ட செயற்பாடுகள் முடிவடைந்த உடன் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | | வைக்கப்படுதல் வேண்டும். |
| | | (ii) | நிர்ணயிக்கப்பட்ட செயற்பாடுகள் முடிவடைந்த உடன் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் தீர்த:த வைக்கப்படாதிருந்தும் கம்பனியின் உதவி நிருவாக முகாமையாளரக்க மீண்டும் குறித்த செயலுக்கான உபகட்டு நிதி வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன | இணங்கிக் கொள்ளவில்லை. இதன் போது அந்த உத்தியோகத்தர் ஆண்டு முழுவதும் அடிக்கடி பெற்றுக்கொண்ட முற்பணங்களை கருத்தில் கொள்ளப்பட்ட போதிலும் அவர் அந்த முற்பணங்களை அவ்வப்போது தீர்த்து வைத்த முறைமை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என தோன்றியது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பெற்றுக்கொண்ட முற்பணங்கள் தீர்த்துவைக்கப்படாதிருக்கையில் மேலும் ஏனைய முற்பணங்கள் வழங்கப்படாதிருத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 21 ஆந் திகதிய PED 08/2022 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | | கம்பனியின் ஊழியர்களுக்கு சேமிக்கப்பட்ட விடுமுறைகளுக்காக படிகளைச் செலுத்தும் போது அந்த கொடுப்பனவுகளுக்காக கருத்தில் கொள்ளப்படும் ஆண்டிற்கு முன்னைய ஆண்டு தொடர்பாக திறைசேரிக்கு செலுத்த வேண்டிய பங்கிலாபம்/ வருமான வரி செலுத்தப்பட்டிருக்க வேண்டிய போதிலும் கம்பனியால் 2019/2020, 2020/2021 மற்றும் 2021/2022 ஆம் ஆண்டுகள் தொடர்பாக செலுத்த வேண்டிய பங்கிலாபத்தினை செலுத்தாது கம்பனியின் ஊழியர்களால் | இணங்கிக்கொள்ளவில்லை. பொதுத்திறைசேரியின் 01/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் ஊழியர்கள் சேமித்த விடுமுறைக்காக செலுத்தும் இயலுமை காணப்படுகின்றது என தெரிவிக்க விரும்புகிறேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சேமிக்கப்பட்ட குறுகிய விடுமுறை, மருத்துவ விடுமுறை என்பவற்றிற்காக மொத்தப் பெறுமதி ரூபா 4,113,280 விடுமுறைப் படியும் நிறைவேற்றுத் தரத்திலுள்ள உத்தியோகத்தர்கள் சேமித்த மருத்துவ விடுமுறைக்காக மொத்தப் பெறுமதி ரூபா 1,708,981 படியும் செலுத்தப்பட்டது. | | |
| (இ) | 2021 திசெம்பர் 15 ஆந் திகதிய 03/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | 2022 ஆம் ஆண்டிற்கான மிகையூதியத்தினை செலுத்தும் போது கணக்காய்வு செய்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் செலுத்தப்பட வேண்டிய போதிலும் 2020/2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2022 திசெம்பர் 14 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு முன்னர் மிகையூதியமாக ரூபா 1,660,500 பணம் செலுத்தப்பட்டது. | 2022 மே 04 ஆந் திகதி அவ்வாறான கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை. எனத் தெரிவிக்க விரும்புகிறேன். எங்கள் கம்பனியால் PED 09/2022 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் மிகையூதியம் செலுத்தப்பட்டது என தெரிவிக்க விரும்புகிறென். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 361,195,599 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 160,827,729 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 200,367,870 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு விற்பனைக் கிரயத்தில் குறைவு, ஏனைய வருமானங்கள் மற்றும் தேறிய நிதி வருமானத்தில் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை வங்கியின் நடைமுறைக் கணக்கிலிருந்து 2022 நவம்பர் 10 ஆந் திகதி ரூபா 100,000,000 தொகை ஒரு நிலையான வைப்பினை ஆரம்பிப்பதற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க அந்த நடைமுறைக் கணக்கு மேலதிகப் பற்று மீதியாக மாறியிருந்ததன் காரணமாக அந்த நிலையான வைப்பிற்காகச் செலுத்திய வட்டியினை விட 2.5 சதவீத மிகை வட்டி செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | இணங்கிக் கொள்ளமுடியாது. 2022 நவம்பர் மாதம் 10 ஆந் திகதி பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 100,000,000 பணத்தை பயன்படுத்தி ஆரம்பிக்கப்பட்ட நிலையான வைப்பிற்காக தகமையுள்ள வட்டி சதவீதாமாகும். அதற்கிணங்க அப்பணம் வங்கி மேலதிகப் பற்றினூடாக பெற்றுக்கொள்வதற்காக செலவு செய்வதற்கு ஏற்பட்ட 2.5 சதவீத மேலதிக வட்டிச் செலவினைவிட அதிக வட்டி வருமானம் எங்களால் பெற்றுக்கொள்ளப்பட்டது என தெரிவிக்க விரும்புகிறேன். அதற்கிணங்க கம்பனியின் பணம் மிகவும் ஆகப்பபூர்வமாகவும் வினைத்திறனாகவும் முகாமைத்துவம் செய்யப்பட்டுள்ளது எனவும் பணிப்பாளர் சபை அங்கீகாரம் அதற்கு கிடைத்துள்ளது எனவும் தெரிவிக்க விரும்புகிறேன். இதற்கு முன்னரும் இப்பிரச்சினை முன்வைக்கப்பட்ட போதிலும் அதற்காக தேவையான பதில் அதன் போதும் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருந்தது. | சரியான தீர்மானத்தின் அடிப்படையில் பணம் முதலீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மஹவெலி அதிகார சபையின் ஹம்பாந்தோட்டை குத்தகை காணியில் ஒரு களஞ்சியத்தை நிர்மாணிப்பதற்கு கம்பனியால் 2019/2018 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட தொடக்க செலவுகளின் மொத்தம் ரூபா 3,732,901 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டு வரையும் அதில் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவோ அல்லது ஏனைய வினைத்திறனான செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படவோ இல்லை. அதற்கிணங்க மேற்கூறிய செலவுகள் ஒரு விளைவற்ற செலவாக மாறியிருந்தது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | ஒவ்வொரு காப்பகுதியிலும் இடம்பெறுகின்ற அரசாங்க கொள்கை மாற்றத்தின் காரணமாக திட்டமிட்ட செயற்பாடுகளை நிறைவேற்ற முடியாதுள்ளது. அவ்வாற எதிர்காலத்தில் இக்காணியை மிகவும் வினைத்திறனாக ஈடுபடுத்துவதற்கு தேவையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. | வளங்களை வினைத்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |
| (இ) | வரையறுத்த கொழும்பு கொமேர்சல் பசளைக் கம்பனியின் அனுராதபுர மாவட்டத்தில் இருப்புக்களை பகிர்ந்தளிப்பவராக செயற்பட்ட | இணங்கிக்கொள்ள முடியாது. இந்த சம்பவமானது 2009 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட சம்பவமாக உள்ளதுடன் கம்பனி தரப்பினர்கள் | கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| கமத்தொழில் பயிர்ச் செய்கையாளர்களின் அமைப்பிற்கு கமநல சேவை நிலையங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக வழங்கப்பட்ட பசளைகளில் 2006 ஏப்ரல் 26 ஆந் திகதியிலிருந்து 2009 மே 25 வரையான காலப்பகுதியின் போது 7,508.45 மெற்றிக் தொன் நிராணப் பசளைகளின் பற்றாக்குறைகள் அவதானிக்கப்பட்டதுடன் அந்த இருப்பு பற்றாக்குறையின் சந்தைப் பெறுமதியான ரூபா 848,003,961 நட்டத்தை இன்றுவரை அந்த அமைப்பிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கக்கூடிய அனைத்து சட்டரீதியான நடவடிக்கைகளும் தற்பொழுது எடுக்கப்பட்டுள்ளதுடன் அனுராதபுரம் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகள் தற்பொழுது இடம்பெற்று வருகின்றது என வலியுறுத்துவதுடன் முன்னைய பல சந்தர்ப்பங்களின் போது இது தொடர்பான அனைத்து தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அரசாங்க தொழில் முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தின் போதும் இப்பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடப்பட்டிருந்தது எனவும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இவ்வாறான கணக்காய்வு ஐயவினாக்கள் முறையான புலனாய்வின்றி சமர்ப்பிக்கப்படுதல் பொருத்தமற்றது எனவு உத்தேசிக்கப்படுவதுடன் பூரணமற்றதும் தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதும் நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு அப்பாற்பட்டதுமான நடவடிக்கைகளைச் சமர்ப்பித்தலானது நிறுவனத்தினைப் போல பொருளாதாரத்திற்கும் தாக்கத்தினை ஏற்படுத்தலாம். நிதியத்தின் சர்வதேச நிதி மூலங்களினது அவதானிப்புக்களுக்கும் இந்த விடயம் உட்படலாம். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| திறைசேரி செயலாளரின் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையுடன் வழங்கப்பட்ட செயற்பாட்டுக் கையேட்டின் 6.6 ஆம் பிரிவு | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் ஒவ்வொரு அரசாங்க கம்பனியும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் 2022/2023 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 126 நாட்கள் கடந்த பின்னரே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமரப்பிக்கப்பட்டுள்ளது. | இந்த 126 நாட்கள் வரையான காலப்பகுதிக்காக கம்பனியின் தாமதத்திற்கு மேலதிகமாக எங்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களும் தாக்கமளித்துள்ளது. அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் எதிர்காலத்தில் இக்காலத்தினை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |